# சிலப்பதிகாரம் காட்டும் இல்லற நெறிகள்

**முனைவர் இரா.பழனிச்சாமி**
உதவிப் பேராசிரியர்
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி)
பெரம்பலூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

தமிழ்த்தாயின் மணியாரமாகத் திகழும் சிறப்பினையுடையது சிலப்பதிகாரம். காப்பியத்தைப் படைத்தளித்த இளங்கோவை உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகச் சிறப்பிப்பார் பாரதியார். இந்நூல் தமிழிலக்கிய மரபில் பல்வேறு புதுமைகளைச் செய்த புரட்சிக் காப்பியமாகும். முத்தமிழ், மூன்று நாடுகள் எனப் பிரித்துப் பேசும் இடங்களிலும், சமயப் பொதுமைகள் பற்றிப் பேசி ஒற்றுமையை வலியுறுத்தும் இடங்களிலும் எனப் பல்வேறு பரிணாமங்கள் பெற்ற புதுமைக் காப்பியம். "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்ற தன்மையை ஏற்றுக் கொண்டு வாழ்ந்த கண்ணகி சீறும் புலியாகச் சிலிர்த்தெழுந்த வீரத்தை உலகிற்கு வெளிச்சமிட்டுக்காட்டிய சிறந்த படைப்பு இது. பெண்மையின் அடக்கத்தையும், கொடுமைக்கு எதிராகக் கிளர்த்தெழும் வீரத்தையும் காட்டிய பெண்ணியப் புரட்சி எத்தன்மையில் இருக்கும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டிய காப்பியமாகும். பல்வேறு சிறப்புக்களையும்கொண்ட சிலம்பில் இல்லற நெறிகள் எவ்வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இல்லற நெறிகள்

இல்லறம் முழுக்க “இல்லாளை” ச் சார்ந்தது. அவளாலேயே சிறப்புப் பெறுவது. எனவே இல்லறமென்பது நல்லறமாக அமையவேண்டும். இல்லறம் தவிர்த்த பிற செயல்களில் எவ்வளவு புகழுக்குரியவர்களாக இருப்பினும் இல்லறத்தில் தவறு ஏற்படின் ஏனைய சிறப்புக்கள் அனைத்தும் சிதைந்து விடும். எனவே ஒவ்வொரு மனிதனுக்கும் இல்லறக் கடமையே முக்கியமான கடமையாக அமைகின்றது.

“வினையே ஆடவர்க்கு உயிராக” இருப்பினும் இல்லற இயல்புகளை மீறி நடப்பவர்க்குத் துன்பமே நேரும் என்பதற்குச் சான்று கோவலனின் வாழ்வு. அவன் வினை செய்யவில்லை என்பதோடு மனைவியை விடுத்து மாற்றாளுடன் சென்றதன்மை அவனின் பெருமையை மட்டுமின்றி அவன் குடிப்பெருமையையையும் அழித்துவிடுகின்றது. எனவே இல்லாளுக்கு மட்டுமின்றி அவனுக்கு இனியவனாக உள்ள கணவனும் “கற்பெனும் உறுதி பூண்டவனாக இருக்கவேண்டும்” என்பதைச் சிலம்பு இல்லற நெறியாக வலியுறுத்துகிறது. இவ்விடத்தில் இல்லற நெறிகளை விளக்கிக்காட்ட குடும்ப அமைப்புப் பற்றிக் கூறுவது அவசியமானதாகும்.

## குடும்ப அமைப்பின் தோற்றம்

மனித சமூகத்தின் தொடக்க காலத்தில் எதற்கும் எப்பொழுதும் எத்தகைய கட்டுப்பாடும் விதிக்கப்பட்டதில்லை. எனவே மனிதன் தமது தேவைகள் சார்ந்து எதனையும் பெற்று வந்தான். ஆனால் காலப்போக்கில்

இத்தகு செயல்பாடுகள் அவனைப் பொறுப்பற்றவனாக ஆக்கியதோடு, சமூகத்தில் பல்வேறு குழப்பங்கள் உருவாகவும் வாய்ப்பினை ஏற்படுத்தின. எனவே இதிலிருந்து சமூகத்தை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் சில விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அதில் மிக முக்கியமான ஒன்றாகத் திருமணம் அமைந்தது. அது சாத்தியப்பட்டபிறகே மனிதனின் வளர்ச்சியில் அனைத்தும் சாத்தியப்படத் தொடங்கின.

இல்லற நெறிகளுக்கு அடிப்படையாக அமையும் "கரணம்" என்னும் திருமணச் சடங்கு சமூகத்தில் ஏற்பட்ட குற்றங்களைக் களைவதற்காக ஏற்படுத்தப்பட்டது. "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல் – கற்பு – 4) என்பதோடு அது கொடுப்பக் கொள்வது, புணர்ந்து உடன் போகியது என வகைப்படுத்தப்பட்டுள்ளது (கற்பு – 1,2) என்பதையும் அறிகிறோம். இது வடவரின் எண்வகைத் திருமண வகைப்பாட்டினுள் "காந்தருவம்" என்பதோடு மட்டும் ஏற்புடையதாக உள்ளதையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

சங்க இலக்கியங்கள் கூறும் திருமண முறைகளுக்கும், சிலம்பு காட்டும் திருமண முறைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. அகநானூறு பதிவு செய்துள்ள திருமண முறைக்கும், கலித்தொகை எடுத்துரைக்கும் திருமண முறைகளுக்கும் சிறு வேறுபாடுகள் இருப்பினும், சிலம்பு கூறும் "மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட" (சிலம்பு, மங்கல.51,52) என்பதுவும், அக்னியை வலம் வருவதும் காலத்தின் மாற்றத்தையும் வடவரின் சடங்குகள் தமிழகத்தில் உட்புகுந்த வரலாற்றையும் எடுத்துக் காட்டுகின்றன.

கண்ணகியைக் குறிப்பிடும் அடைமொழிகளான "தீதிலா வடமீனின் திறம் இவள் திறமென்றும், மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்து காதலாள் (மங்கல – 28,29) என்றும், சாலி ஒரு மீன் தகையாளை (மேலது.51) என்றும் குறிப்பிடுவது இல்லறத்தில் இணையும் பெண் கற்பில் சிறந்தவளாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதோடு தொல்காப்பியர் கூறும்,

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்குரிய தென்ப" (களவு – 8)**

என்பதற்கான சான்றாகவும் திகழ்வதைக் காண முடியும். கண்ணகி மேலே கூறிய பெண்மைக்குரிய பண்புகளோடு கற்பென்னும் உறுதிபூண்ட நங்கையாக இருந்துள்ளாள். அப்படி இருப்பதுவே இல்லற நெறியாக அக்காலத்தே வலியுறுத்தப்பட்டது என்பதனையும் அதன்வழி அறியலாம்.

சிறப்புக்குரிய பெண்ணைத் திருமணம்செய்யும் ஆணும் அதே தகுதியோடு இருக்கவேண்டும். அல்லது "மிக்கோனாயினும் கடிவரையின்றே" என்பதற்கேற்ப ஆண் கூடுதல் தகுதி பெற்றவனாக இருக்க வேண்டும். அதுவே இல்லறம் சிறக்க அடிப்படையாக அமையும். தொல்காப்பியர் பத்து வகை ஒப்புமைகளைப் பட்டியலிடுகின்றார். அவை:

**"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்த காமவாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே" (மெய்-25)**

இவ்வொப்புமைகளில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் பொருந்தி வருபவை அதிகம். எனினும் "உணர்வு" என்பது வேறுபடுவதைக் காண முடிகின்றது. இயல்பினிலேயே கலையார்வமிக்கவன் கோவலன். கலை என்றால் என்ன விலை எனக் கேட்கும் "வண்ணச் சீறடி மண்மகள் அறியாதவள்" கண்ணகி. எனவே மற்ற ஒன்பது ஒப்புமைகளில் ஒன்றுபட்டும் உணர்வால் ஒன்றுபடாமல் போனதன் விளைவே அவர்களின் பிரிவு. எனவே இல்லறம் சிறக்க கணவனும் மனைவியும் பொருத்தப்பாடுடையவர்களாய் இருக்க வேண்டும் என்பது இல்லற நெறியாக வலியுறுத்தப்படுவதை அறிய முடிகின்றது.

தமிழ்ச் சமூக மரபுப்படியான ”களவின் வழிப்பட்டதே கற்பு” என்ற சிந்தனை சிலம்பு காட்டும் கண்ணகி கோவலன் வாழ்வில் இடம்பெறவில்லை. இது ”கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக் கொடுக்கும் மரபினர் கொடுப்பக் கொண்டது (கற்பு.1). அதுவும் மன்னரின் பின்னோர் என்று பெருமைபடக் கூறும் வணிகர் குடியில் நடந்தது. ”மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் குலக் கொம்பர்” (மங்.24) “பெருநிலம் முழுது ஆளும் பெருமகன் தலைவைத்த, ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தான், வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான்” (மேலது.31-33) என்று பிறப்பினாலும், குடிமையினாலும், செல்வத்தாலும் சமமாக விளங்கியவர்கள் பார்த்துச்செய்து வைத்த திருமணம் அது. எனினும் வள்ளுவர் காட்டும்

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது” (குறள்.45)**

எனக் கூறுவதில் அன்பிற்கும், அறனுக்கும் பொருந்துபவர்களாகக் கண்ணகியும் கோவலனும் உள்ளனர். எனவேதான் கோவலனுக்கு “இல்லோர் செம்மல்” என்ற பட்டம் உரியதானது. எனினும் அத்திருமண நிகழ்வின் பண்பினைக் கோவலன் மறந்ததால், அவர்களின் இல்லற வாழ்வு பயனற்றுச் சென்றதைச் சிலம்பு காட்டுகிறது.இல்லறத்தில் இணைவோர் அன்பிற்குரியவராகவும், அறச்செயல்களை மேற்கொள்பவர்களாகவும் இருப்பதோடு “பிறன்மனை நோக்கா” பேராண்மைமிக்க பண்பினைப் போற்றுபவர்களாகவும் இருந்தால்தான் அவ்வாழ்க்கை பயனுடைய வாழ்க்கையாக அமையும் என்பதே இதன்வழி அறியலாகும் இல்லற நெறியாகும்.

**தனிக்குடித்தனம்**

சங்க கால வாழ்வில் மக்கள் தனிக்குடித்தனம் நடத்தியதற்கான பதிவுகள் இல்லை. சிலம்பு முதன்முதலில் தனிக்குடித்தனம் பற்றிய செய்தியினைத் தருகின்றது. தற்காலத்தில் கூறப்படுவதைப் போன்று அது அப்பொழுது பொருந்தாத செயலன்று. இங்கு இருவரின் பெற்றோரும் இணைந்தே தனிக்குடித்தனத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர். அதற்கான காரணம் அவர்கள் இல்லறத்தின் இயல்புகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதோடு அவர்களுக்கான கடமைகளைச் செய்யவும், பொறுப்புணர்வு மிக்கவர்களாக மாற்றவும் எனப் புரிந்துகொள்ள முடிகின்றது. இதனை,

**“பேர் இயல் கிழத்தி**
**மறப்படும் கேண்மையோடு அறப் பரிகாரமும்**
**விருந்து புறந்தரும் பெருந்தண் வாழ்க்கையும்**
**வேறுபடு திருவின் வீறு பெறந் காண**
**உரிமைச் சுற்றமொடு, ஒரு தனிப் புணர்க்க**
**யாண்டு சில கழிந்தன இற்பெருங் கிழமையின்**
**காண்தகு சிறப்பின் கண்ணகி தனக்கு என்” (மனையறம்படுத்த.84-90)**

எனக் கூறுவது இல்லறத்தாரின் கடமை எதுவென்று காட்டுகின்றது.

**“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை” (குறள்.47)**

என வள்ளுவர் கூறுவதில் இல்லில் மனைவியோடு வாழ்பவன் இளைஞர், முதியர், துறவி என்ற மூன்று நிலையில் உள்ள மக்கட் சமுதாயத்திற்கும் அவர்களுடைய வாழ்க்கைத் துணையாக உள்ளவன் (அ.நடேச முதலியார், திருவள்ளுவர் அறம்) என்கிறார். மேலும் பிரம்மச்சாரியம் காப்போர், தவம் செய்பவர், முற்றும் துறந்த துறவியர் ஆகிய மூவர்க்கும் துணையாக இருக்க வேண்டும். துறவியர்க்கு வேண்டுவன அளித்து, ஆதரித்து அவர்களைப் பேணுதல் இல்வாழ்வானின் கடமைகளுள் ஒன்றாக உள்ளது. சிலம்பில் தவறு செய்த மனைவியை வெறுத்து ஒதுக்கிச் சென்ற பார்ப்பானை அவன் மனைவியோடு இணைத்துவைக்கும் “கருணை மறவனாக” கோவலன் உள்ளான். பிரிந்தவர்களைச் சேர்த்து வைப்பது இல்லறத்தாரின் கடமையாக உள்ளதைக் காண முடிகின்றது. அதோடு மணிமேகலையின் பெயர் சூட்டு விழாவில் வந்தவர்க்கு எல்லாம் வாரி வழங்கிச் சிவந்த கையினை உடையவனாகக் கோவலன் இருந்தான். எனவேதான் அவனை “நடவாச் செல்வ” எனப்

புகழ்ந்தனர். எனவே இல்லறத்தான் கொடைப்பண்பு மிக்கவனாக இருக்க வேண்டும் என்பதும் இல்லற நெறியாகப் பேணப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

தொல்காப்பியர் கூறும் இல்லறத்தாருக்கு இருக்கக் கூடாத பண்புகளாக,

**“நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி**
**வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை**
**இன்புறல் ஏழைமை மறப்பொடு ஒப்புமை**
**என்று இவை இன்மை என்மனார் புலவர்” (தொல்.1216)**

என்பதில் பத்தாண்டுகளுக்கும் மேலாகச் சேர்ந்து வாழ்க்கை நடத்திய கோவலன் மாதவியின் அழகோடும் கலைத்திறமையைக் கண்ணகியோடு ஒப்பிட்டு எண்ணிய வேண்டாத பண்பினாலேயே “ஊழ்வினைக்கு” ஆட்பட்டு காலத்தின் கரங்களில் வாழ்வை ஒப்படைத்ததைக் காண்கிறோம்.

**வாழ்க்கைத் துணைநலம்**

இல்லம் செழிக்கவும், சிறக்கவும் வேண்டுமெனில் இல்லாள் நற்பண்புடையவளாக, கருத்தறிந்து செயல்படத்தக்கவளாக, பொறுப்புடையவளாக, துன்பத்திலும் இன்முகம் உடையவளாக இருத்தல் வேண்டும். செல்வத்தைக் கண்டு மகிழாமையும், வறுமை கண்டு வெறுக்காமையும் கொண்ட மனதுடையவளாக இருக்க வேண்டும். வறுமையுற்றிருக்கும் காலத்தே ஆணின் இயலாமையை எடுத்துரைக்காத, செயலின்மையை வெறுத்து ஒதுக்காதவளாக மனைவி இருத்தல் வேண்டும்.

**“கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**
**மெய்யியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்” (கற்.11)**

எனத் தொல்காப்பியர் கூறுவதில் இல்லத்தரசியின் பண்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு” என்ற நிலையில் “நன்மக்களைப் பெறுதல்” கண்ணகிக்கு வாய்க்கவில்லை மாதவி, மணிமேகலை என்ற மகளைப் பெற்று பெருமையடைகின்றாள். ஏனைய பண்புகள் அனைத்தும் பெற்றவளாகக் கண்ணகி சிறப்புறுகிறாள். மாதவி “எதிர்மொழியாமை” என்ற சிந்தனையில் மாறி ”கானல்வரி” பாடியதன் வழியாக அம்மரபைப் புறந்தள்ளுகின்றாள். எனினும் அதுவும் “பாட்டிடை வைத்த குறிப்பினை”ப் போன்றே அமைந்துள்ளது. என்றாலும் அந்நிகழ்வு அவள் அடுத்து அடையப்போகும் துன்பத்திற்கு அச்சாரமாக மாறிப்போனதைக் காணமுடிகிறது.

குறுக்கு வழியில் கணவனைப் பெற விரும்பாதவளாகக் கண்ணகி உள்ளாள். அது அவள் சார்ந்த மதத்தின் வழக்கமாக இருப்பினும் உறுதித் தன்மைமிக்கவளாக அவள் இருந்ததையே அந்நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது. சோமகுண்டம், சூரிய குண்டத்தில் நீராடி காமவேள் கோட்டத்தைத் தொழச் சொன்ன தேவந்தியிடம் “பீடன்று” (ப.151) என்ற ஒற்றை வார்த்தையால் மறுத்தவள் கண்ணகி. இது கணவன் வரும்வரை காத்திருக்கும் முல்லை நிலத் தலைவியின் பண்பான “இருத்தலும் இருத்தல் நிமித்தமும்” என்பதுடன் தொடர்புடையது. அதனால்தான் கண்ணகி ”முல்லை சான்ற கற்பின் மெல்லியளாகத்” திகழ்கின்றாள். எனவே கணவன் மீண்டும் வரும்வரை காத்திருக்கும் பண்பு இல்லற நெறியாகக் கூறப்படுவதை உணரலாம்.

கோவலன் மீண்டும் வந்து கண்ணகியைச் சேர்ந்தபிறகு அவன்மீது அவள் கோபப்படவில்லை என்பதோடு ஊடலும் கொள்ளவில்லை. அதோடு அவனுக்கு அன்போடுகூடிய அமுது செய்து பாசத்தோடு பரிமாறும் மனையாளாகத் திகழ்கின்றாள். (ப.283) கணவன் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்பவளாகப் பெண் இருக்க வேண்டும். எனினும் அதற்கான சூழல் ஏற்படும் வரையிலும் காத்திருக்க வேண்டும். எனவேதான் ”எழுக எனச் சொன்னவுடன் எழுந்தாய் என் செய்வேன்” எனக் கோவலன் வருத்தத்தோடு உருகும் நேரத்தில் தமது இல்லறக் கடமையைச் செய்யத் தடையாக அமைந்த அவனது செயல்பாட்டினைக் கடிந்து கூறுகிறாள்.

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (கொலைக்களக்காதை 71-73)**

எனக் கூறுவது இல்லறக் கடமையைத் தெளிவாக்குகிறது. மேலே கூறிய கடமைகளைச் செய்ய கணவனும் உடன் இருக்க வேண்டும் என்பது இல்லற நெறியாகும். ஆனால் அக்கடமைகளை நிறைவேற்றும் வாய்ப்பில்லாதவளாக கண்ணகி இருந்துள்ளாள்.

கண்ணகி கணவனின் இல்லறம் மறந்ததன்மையை எடுத்துக்காட்டுவதோடு அவனுக்கு எது விருப்பமோ அதுவே தம் விருப்பமாகும் எனக் கூறுகிறாள்.

**"போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்**
**மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்**
**ஏற்றெழுந்தனன் யான் என்றவள் கூற" (மேலது.பா.81-83)**

என்றுரைப்பது கண்டிப்போடுகூடிய உடனிருப்புக்குச் சான்றாகும். இந்தச் செய்தியைப் பொருத்தளவில் சங்க மருதத்திணை மக்களின் பண்பான "ஊடலும் ஊடல் நிமித்தமும்" என்றதன்மை கொண்டவளாகக் கண்ணகி உள்ளாள். ஊடல் என்பது கோபத்தோடுகூடிய இயலாமையின் வழிப்பட்டது என எடுத்துக்கொள்ளலாம். அதனால்தான் அவளால் குன்றனைய செல்வம் தொலைந்தபின்னரும் சிலம்புள கொண்ம் எனக் கூற முடிகிறது. கணவன் மனைவி உறவு இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்தேயிருப்பது. "இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே" என்பதனைப் போன்றது. அவ்வாறு வாழ்வதே இல்லற நெறியாகக் கூறப்படுகிறது.

யாரையும் தெரியாத ஊரில் கள்வன் என குற்றம் சாட்டப்பட்டுக் கோவலன் கொல்லப்பட்டதற்குப் பின்பும் கணவன் மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் தீர்க்க தனியொரு பெண்ணாா் நின்று போராடி வெற்றி பெறுகின்றாள். அதனால்தான் அவளைக் காணும் அனைவரும் தெய்வமாகவே பார்க்கின்றனர்.

**"இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி**
**தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து**
**ஒரு மாமணியாய் உலகிற் தோன்றிய**
**திருமாமணி" (வேட்டுவ வரி 47-50)**

என சாலினி உரைப்பதும்,

**"கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"**

என கவுந்தியடிகள் உரைப்பதும்,

**"பத்தினிக் கடவுளைப் பாடல் வேண்டும்"**

என சேரமாதேவி கூறுவதும்,

**"இமயமலை வரை எங்கோன் செல்வது**
**கடவுள் எழுதவோர் கற்கே யாதலின்"**

எனச் சொல்லப்படுவதற்கும், "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற சிந்தனைக்கும் அடிப்படையாக ஆணிவேராக அமைந்திருப்பது அவள் போற்றி வாழ்ந்த இல்லற நெறியே ஆகும்.